ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2040/44 - 2017 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2017.10.13
*2040/44 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு பொல்கஹவலை, பொத்துஹெர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் தெனகமுவ 500 கன மீற்றருடைய நிலக்கீழ் நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியின் உரித்துடைமையை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2017, ஒற்றோபர் 10,*
*5/2/2/1291.*

**அட்டவணை**

குருநாகலை மாவட்டத்தில், பொல்கஹவலை பிரதேச செயலாளர் பிரிவில், டெம்பான கிராம அலுவலர் பிரிவில், றபர் கன்த பனலிய கிராமத்தில் அமைந்துள்ள றபர் கன்த என்றழைக்கப்படும் காணியை உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. சுதர்மன் சிறிபால என்பவரினால் தயாரிக்கப்பட்டுள்ள 2402 ஆம் இலக்க நில வரைபடத்தில் துண்டிலக்கம் 01 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள முழு விஸ்தீரணத்தில் இருந்து 38.37 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஆ. நி. து. 1730 இன் வீதிப் பாதுகாப்பு ; |
| கிழக்கு | : | திரு. சிசிர குமார உரிமைகோருகின்ற காணி ஆ. நி. து. 1730 இன் துண்டிலக்கம் 02 ; |
| தெற்கு | : | திரு. சிசிர குமார உரிமைகோருகின்ற காணி ஆ. நி. து. 1730 இன் துண்டிலக்கம் 02 ; |
| மேற்கு | : | ஆ. நி. து. 1730 ஆம் துண்டிலக்கம் 03 கிராமத்திற்கு செல்லும் வழி. |

காணிக்கு உரிமைகோருபவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் : எம். டபிள்யூ. சுநில் செநெவிரத்ன,
றபர் கந்த,
பனலிய,
பொல்கஹவலை.

10- 1634

1A - G 26422 — 18 (2017/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*